குலுக்கல் வெற்றியாளர்களுக்கான – படிப்படியான இணையவழி அலகு முன்பதிவு நடைமுறைகள்

உங்களுக்கு விருப்பமான அடுக்குமாடி குடியிருப்பு / மனை/ வீட்டை முன்பதிவு செய்ய, இணையதளம் மூலம் இந்த வழிமுறைகளைப் பின்பற்றவும்:

1. தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வலைத்தளத்தைப் பார்வையிடவும்: https://tnhb.tn.gov.in–ல் உள்ள அதிகாரப்பூர்வ தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வலைத்தளத்திற்குச் சென்று, இணையதளத்தில் **"இப்போது முன்பதிவு செய்"** (Book now) பகுதியைத் தேடுங்கள்.

2. "இப்போது முன்பதிவு செய்" பொத்தானை சொடுக்கிய பிறகு:

a. தொடர்புடைய பகுதிக்குச் சென்று, **"வெற்றியாளர் – இப்போதே முன்பதிவு செய்"** (Winner – Book Now) பொத்தானைக் சொடுக்குவதன் மூலம் உங்களுக்கு விருப்பமான வெற்றியாளர் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கவும்.

b. நீங்கள் **"LOT–வாடிக்கையாளர்"** (LOT–Customer) உள்நுழைவு பக்கத்திற்கு திருப்பி விடப்படுவீர்கள்

c. உங்கள் தற்போதைய பயனாளர் பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி உள்நுழையவும்.

d. கிடைக்கக்கூடிய அலகுகளிலிருந்து உங்களுக்கு விருப்பமான அடுக்குமாடி குடியிருப்பு / மனை / வீட்டை தேர்ந்தெடுக்கவும்.

e. தேர்ந்தெடுக்கப்பட்ட அலகு விவரங்களை மதிப்பாய்வு செய்து உறுதிப்படுத்தவும்.

f. உங்கள் பதிவு செய்யப்பட்ட கணக்கு மூலம் நியமிக்கப்பட்ட கட்டண நுழைவாயிலைப் பயன்படுத்தி (Internet Banking or Debit Card or IMPS) முன்பதிவுத் தொகையைச் செலுத்த தயவுசெய்து தொடரவும்.

  i. அனைத்து விண்ணப்பதாரர்களும் தங்கள் வங்கிக் கணக்கில் தேவையான நிதி இருப்பதை உறுதி செய்ய வேண்டும் மற்றும் அவர்களின் பற்று அட்டைகள் (Debit Card) மற்றும் இணைய வங்கிச் சேவைகளில் தேவையான தொகைக்கு தேவையான பரிவர்த்தனை வரம்பை உயர்த்தி வைத்திருக்க வேண்டும்.

g. உங்கள் முன்பதிவு கோரிக்கையை உறுதிசெய்து சமர்ப்பிக்கவும்.

உங்களுக்கு விருப்பமான அலகை வெற்றிகரமாக முன்பதிவு செய்ய இந்த நடைமுறைகளை கடைபிடிக்கவும்.

குறிப்பு: கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை கவனமாகப் பின்பற்றி, குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அலகு முன்பதிவு செயல்முறையை முடிக்கவும்.

Verified RealEstate